# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No.220/2021 P.W. 4 / LW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சத்தியராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.06.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். அசா 1 பன்னீர்செல்வம் எனது அக்கா வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்தான். கடந்த 07.01.2021 ஆம்தேதி மாலை 6.30, 7 மணி இருக்கும் இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் எனது அக்காவையும் ,அக்கா வீட்டுக்காரரையும் வீட்டு வாசலுக்கு வந்து மூர்த்தி என்பவரிடம் ஏன் பேச்சு வார்த்தை வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்றும் , நான் சொல்வதைதான் அனைவரும் கேட்கவேண்டும் என்றும் அதை மீறி நடந்தால் அடிப்பேன் என்றும் ெ கட்ட வார்த்தை பேசியதாகவும், கண்ணையன் பன்னீர்செல்வத்தை கம்பால் அடித்ததாகவும் எனக்கு போன் மூலம் எனது அக்கா ராணி தகவல் சொன்னார். பின்னர் நான் உடனடியாக நான் எனது மைத்துனர் பன்னீர்செல்வம் வீட்டுக்கு வந்து நான்தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் விசாரித்தார்கள், நடந்த விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை : 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை மேற்படி ஆஜரின்மை கு.வி.மு.ச. 1973 பிரிவு 317ன் மனுஅ னுமதிக்கப்பட்டது. 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No.220/2021 P.W. 5 / LW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பரிமளா | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.06.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். அசா 1 பன்னீர்செல்வம் அண்ணன் முறை ஆவார். அசா 2 எனது மகன் ஆவார். அசா 3 மகாலெட்சுமி எனது ஓர்ப்படியார் ஆவார். பட்டியல் சாட்சி 4 தனலெட்சுமி எனது சகோதரி ஆவார். பட்டியல் சாட்சி தனசேகரன் எனது அக்கா மகன் ஆவார். அவர் விபத்தில் 22 நாட்களுக்கு முன்பு இறந்து விட்டார். நான் கடந்த 07.01.2021 ஆம் தேதி வெளியில் வேலைக்கு சென்று விட்டேன். மாலை 7 மணிக்கு வேலை முடிந்து வீட்டுக்கு வந்தபோது எங்கள் தெருவில் வீரக்குமார், கண்ணையன் மற்றும் பன்னீர்செல்வத்திற்கு இடையே சண்டை நடந்து கொண்டிருந்தது நான்அப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். ஏ ன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கறீர்கள் என்று வீரக்குமார் கேட்டார் , அதற்கு நான் எ ல்லாரும்தான்வேடிக்கை பார்க்குறாங்க நானும் பாரக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு வீரக்குமார் சாராயப்பாட்டிலை உடைத்து என்னை குத்த வந்தார். என் மகன் தடுக்க வந்தபோது எனது மகன் அசா 2 அரவிந்தை, வீரக்குமார் கம்பால் அடித்து விட்டார். எனது மகன் மயங்கி விழுந்து விட்டார், சுத்தமா பேச்சு மூச்சே இல்லை, மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்த விவரம் சொன்னேன் .

**குறுக்கு விசாரணை : 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை மேற்படி ஆஜரின்னை கு.வி.மு.ச. 1973 பிரிவு 317ன் மனுஅ னுமதிக்கப்பட்டது. 2வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1

மன்னார்குடி